(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 63.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, திசெம்பர் 09, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0120/ '10

1.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கையில் மருந்துப் பற்றாக்குறையொன்று தோன்றியுள்ளதாக 2010, மே மாதத்தில் வெளிவந்த ஊடக அறிக்கைகளை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி மருந்துப் பற்றாக்குறைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) மருந்து போன்ற அத்தியவசியப் பொருட்கள் போதியளவு களஞ்சியசாலைகளில் இருக்க வேண்டுமென்பதை அவர் ஏற்றுக் கொள்கின்றாரா?

(ஈ) (i) அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் அடைந்துள்ள நட்டம் அல்லது பெற்றுள்ள கடனின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0235/ '10

2.

கௌரவ சஜித் பிரேமதாஸ, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்ல வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய அங்குணகொலபெலஸ்ஸ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பீரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0542/ '10

3.

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த தினம் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு வைத்தியாசலைக்குச் சொந்தமான நோயாளர் வண்டி இனம் தெரியாதோரால் தீ வைத்து அழிக்கப்பட்டது என்பதையும்,

(ii) இதனால் மேற்படி வைத்தியசாலையின் கடுமையான நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாரை அவசர சிகிச்சைகளுக்காக வேறொரு வைத்தியசாலைக்கு கொண்டு போவதில் அசௌகரியங்கள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) காரைதீவு வைத்தியசாலைக்கு நோயாளர் வண்டியொன்றினை வழங்குவதில் உள்ள தேவைப்பாடு குறித்து அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ள போதிலும், இதுவரை மேற்படி வைத்தியசாலைக்கு நோயாளர் வண்டியினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், மேற்படி வைத்தியசாலைக்கு தாமதமின்றி நோயாளர் வண்டி ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0559/ '10

4.

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் கீழ் "ஓய்வுகால வாழ்க்கைக்கான உறுதுணை" திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு நிவாரணமாக 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியத்தைத் தயாரித்து அடுத்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து (2010) நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2010 வரவு செலவு திட்டத்தில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி நிவாரணம் 2010, வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iv) குறித்த ஓய்வூதிய அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0580/ ‘10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நெற்பயிர்ச்செய்கை செய்யப்படும் பத்து பிரதான மாவட்டங்களையும்,

(ii) மேற்படி மாவட்டங்களில் நெற்பயிர் செய்கைக்குட்படுத்தப்படும் காணியின் ஏக்கரளவையும்,

(iii) கடந்த வருடங்களாக, யல மற்றும் மஹா போகங்களில் அப்பிரதேசங்களில் இருந்து பெறப்பட்ட விளைச்சலை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பெரும்பாலான நெற்பயிர்ச்செய்கையாளர்ள் உரமானியத்தை பெறமுடியாதுள்ளார்கள் என்பதையும், அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டாலும் அது தரம் குறைந்ததாக உள்ளதென்பதையும் அவர் அறிவாரா?

(இ) (i) அமைச்சரானது, ஆகக் குறைந்தளவான ஒரு தரக்கட்டுப்பாட்டை முன் மாதிரியாக வைத்து திறந்த சந்தைக்கு உரமானியத்தை கொண்டு வருவதற்கான நடவடிக்கையை ஏன் மேற்கொள்ளாமலுள்ளது என்பதையும்,

(ii) கடந்த 3 வருடங்களில் மேற்படி (அ) (i)இல் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட மானிய விலையிலான உரத்தின் தொன்னளவை வருடவாரியாகவும் வெவ்வேறாகவும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0618/ ’10

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகோ பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த திரு. எச்.எம். வசந்த அநுர குமார செக்கரதாரிஸ்வத்தையில் பேணிவந்த பப்பாசி செய்கையை எவரேனும் ஒருவர் அல்லது கும்பலொன்று அழித்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ii) ஆமெனில், இதன் காரணமாக இவருக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இச்சம்பவம் தொடர்பில் திரு. வசந்த செய்த முறைப்பாட்டினை மாகோ பொலிஸ் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் ஊடக நிறுவனமொன்று முன்வந்தமையால் இதுபற்றி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இவ்விசாரணையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்,

(ii) எவரேனும் ஒருவரின் அல்லது கும்பலின் அழுத்தம் காரணமாக மேற்படி விசாரணைகள் நலிவடைந்துள்ளனவா என்பதையும்,

(iii) திரு. வசந்தவுக்கு நேர்ந்த நட்டம் தொடர்பில் இழப்பீடு செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0236/ '10

7\.

கௌரவ சஜித் பிரேமதாஸ, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்ல வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய பெலிஅத்த கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பீரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0581/ '10

8\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கடந்த ஐந்து வருடங்களில் கலாசார முக்கோணத்திற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை வருடவாரியாகவும்,

(ii) கலாசாரா முக்கோணத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களிலிருந்து ஈட்டிக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செலாவணித் தொகையையும்,

(iii) பௌத்த மதத்தின் மேம்பாட்டிற்கும் சுற்றுலாப் பயணிகளுக்கான சந்தையை ஈர்ப்பதற்கும் கலாசார முக்கோணத்தை நாங்கள் ஏன் பயன்படுத்துவதில்லை என்பதையும்,

(iv) ஏற்கனவே அவ்வாறு செய்யப்பட்டிருப்பின் இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பௌத்த சுற்றுலாப் பயணியொருவரின் கண்ணோட்டத்தில் அத்தகைய ஆர்வத்தைத் தூண்டக்கூடிய இலங்கையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஏனைய ஐந்து இடங்களையும்,

(ii) வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தரமுயர்த்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மேற்படி நடவடிக்கை மூலம் ஈட்டப்பட்டவைகளிலிருந்து அரசாங்கம் பௌத்த வணக்கஸ்தலங்களுக்குப் பணம் வழங்குகிறதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், இவ்வணக்கத்தலங்களின் அல்லது இடங்களின் பெயர்களையும் கடந்த ஐந்து வருடங்களில் மேற்கூறியவாறு கிடைக்கப்பெற்ற பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட பதினைந்தாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 08)

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 39ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு மற்றும் போர் வீரர் நலனோம்புகை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2005, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "2005 நில அளவைச் சபை (பதிவு) பிரமாணத்தின்" 2(2) ஆம் பந்தியை திருத்துவதற்காக 2010, ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதிய 1649/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.
பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.
இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.
மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.
ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களளைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.